SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

ஜனவரி - 2019

# TNPSC ZERO CURRENT AFFAIRS MAINS

**0%** Effort | **100%** Results

www.tnpscthervupettagam.com

tnpscfeedback@shankarias.in

Available @Bookmark Store.

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy | Coimbatore | Namakkal.

# ஜனவரி - 2019

## *3 மதிப்பெண் வினாக்கள்*

1. **2019ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது பெற்றவர்கள் யார்?**

| விருதுகள் | பெற்றவர்கள் |
|---|---|
| **காமராசர் விருது** | பழ. நெடுமாறன் |
| **பெரியார் விருது** | சி. பொன்னையன் |
| **கி.ஆ.பெ. விசுவநாதம் விருது** | சூலூர் கலைப்பித்தன் |
| **பாரதிதாசன் விருது** | புலவர். தியாரூ |
| **திரு.வி.க. விருது** | டாக்டர்.கே. கணேசன் |
| **பாரதியார் விருது** | எம்.பாரதி சுகுமாரன் |
| **பேரறிஞர் அண்ணா விருது** | எம். அய்க்கண் |
| **அம்பேத்கர் விருது** | சி. ராமகுரு |
| **திருவள்ளுவர் விருது** | எம்.ஜி. அன்வர் பாட்சா |

2. **நீதியரசர் சி.ராகவன் குழு சமீபத்தில் எதற்காக அமைக்கப்பட்டது?**
   - i) 2019 ஜனவரி 15 அன்று அவனியாபுரம் ஜல்லிக்கட்டு நடத்துவதற்காக
   - ii) மதுரை உயர்நீதிமன்றக் கிளையால் அமைக்கப்பட்டது.
   - iii) 24 பேர் கொண்ட குழு.
   - iv) வழக்கறிஞர்கள் சரவணன், திலிப் மற்றும் ஆனந்த் ஆகியோர் குழுவின் ஒருங்கிணைப்பாளர்களாவர்.

3. **நம்ம சென்னை செயலியின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.**
   - i) சொத்து வரியை இணையதளம் மூலமாக கட்டுதல்
   - ii) சொத்து வரி மற்றும் வர்த்தக உரிமத்தின் நிலையினைக் காணுதல்.
   - iii) பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிழ் பெறுதல்.
   - iv) பெருநகர சென்னை மாநாகராட்சியால் இந்த செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.

4. **தமிழகத்தின் பல்லுயிர் கண்காணிப்புக்குழு பற்றி விளக்குக.**
   - i) 1049 பல்லுயிர் கண்காணிப்புக் குழுக்கள் தமிழகத்தில் உள்ளன.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

ii) தொகுதி மற்றும் நகரங்கள் வாரியாக அமைக்கப்பட்டுள்ளது.

iii) தமிழக பல்லுயிர் குழுவானது பாரம்பரிய பல்லுயிர் தலங்களின் விவரங்களை வெளியிட்டுள்ளது.

iv) தமிழகத்தில் இக்குழுவானது இயற்கை வளங்களை கண்காணித்து பதிவு செய்கிறது. இது மக்களின் பல்லுயிர்ப் பதிவு எனப்படுகிறது.

5. **ROADEO என்றால் என்ன?**

i) சென்னை போக்குவரத்து காவல் துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட ரோபாவின் பெயர் ROADEO.

ii) போக்குவரத்து மேலாண்மைக்கும், சென்னையின் சாலைகளில் பாதசாரிகளுக்கும் உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

iii) இந்த ரோபோவானது போக்குவரத்து சமிஞ்கைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மேலும் புளூ டூத் மூலம் இதனை இயக்கலாம்.

iv) இதன் மூலம் போக்குவரத்து மேலாண்மைக்கு ரோபாக்களை உபயோகப்படுத்துவதில் மும்பைக்கு அடுத்து சென்னை இரண்டாவது நகரம் என்ற பெயரைப் பெற்றுள்ளது.

6. **சமீபத்தில் மோகன் ரெட்டி குழு எதற்காக அமைக்கப்பட்டது?**

i) பொறியியல் கல்வி விரிவாக்கம் பற்றிய நடுத்தர மற்றும் குறுகிய கால தொலைநோக்குப் பார்வை கொண்ட திட்டத்தை உருவாக்க மோகன் ரெட்டி குழு அமைக்கப்பட்டுள்ளது.

ii) 2020 முதல் புதிய பொறியியல் கல்லூரிகள் நிறுவுவதை நிறுத்த வேண்டும் மற்றும் அதன் பிறகு இரண்டு வருடத்திற்கு ஒரு முறை திறன் கட்டுமானம் பற்றிய புதிய மதிப்பீடுகள் வழங்கப்பட வேண்டும்.

iii) தற்போது இருக்கும் கல்வி நிறுவனங்களினுடைய திறன் பயன்பாட்டின் அடிப்படையில் மட்டுமே AICTE அக்கல்வி நிறுவனங்களுக்கு கூடுதல் மாணவர்கள் சேர்க்கைக்கான இடமளிக்க வேண்டும்.

7. **இந்தியப் பாலங்கள் மேலாண்மை அமைப்பு என்றால் என்ன?**

i) இவ்வமைப்பானது நாட்டிலுள்ள அனைத்து பாலங்களின் பட்டியலினையும் கொண்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

ii) பாலங்களின் கட்டமைப்புகளைப் பற்றி மதிப்பிட்டு சரியான நேரத்தில் பாலங்களை பழுது பார்த்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் நடைபெறுதல்.

iii) இந்தியப் பாலங்கள் மேலாண்மை அமைப்பானது உலக அளவில் ஒற்றை உரிமையாளரைக் கொண்ட மிகப்பெரிய அமைப்பாகும். இதில் 1,50,000ற்கும் அதிகமான பாலங்களின் கட்டமைப்புகள் பற்றிய தகவல்கள் இடம்பெற உள்ளன.

iv) இதுவரை 1,15,000 பாலங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றின் 85,000 சிறு பாலங்களும் மீதமுள்ளவை பெரிய பாலங்களுமாகும்.

8. **தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் முக்கிய செயல்பாடுகளைப் பட்டியலிடுக.**

i) இது பிரச்சனைகளுக்கு சுமூகமான தீர்வு பெறுவதற்காக லோக் அதாலத் எனப்படும் மக்கள் நீதிமன்றத்தை அமைக்கிறது.

ii) நல்சாவானது ஒதுக்கப்பட்ட பிரிவுகளைக் கண்டறிந்து அவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் தேவையான சட்ட சேவைகளை அளிக்கும் பல்வேறு திட்டங்களை அவர்களுக்கு கிடைக்கச் செய்கிறது.

iii) நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயங்களில் வழக்கறிஞர்களை வைத்து தங்களது குற்றவியல் அல்லது உரிமையியல் வழக்குகளை நடத்த இயலாத ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான இலவச சட்ட சேவைகளை வழங்க நிறுவனங்களமைத்து அதன் மூலம் நீதியானது கிடைக்கச் செய்யப்படுகிறது.

iv) உதவி மற்றும் ஆலோசனை வழங்குதல் போன்ற இலவச சட்ட சேவைகள் பல்வேறு திட்டங்கள் மூலம் பயனாளிகளுக்கு செய்தல் மற்றும் எவ்விதத்திலும் அவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்தல்.

9. **2018-ல் அறிவிக்கப்பட்ட தேசிய நினைவுச் சின்னங்களில் ஆறு நினைவுச் சின்னங்களைக் குறிப்பிடுக.**

| | | |
|---|---|---|
| **1.** | **நாக்பூரிலுள்ள பழைய உயர்நீதிமன்ற கட்டிடம்** | **மகாராஷ்டிரம்** |
| **2.** | அகாகானின் ஹவேலி | ஆக்ரா |
| **3.** | ஹதிகானின் ஹவேலி | ஆக்ரா |
| **4.** | நீம்ரன பாவோரி | ராஜஸ்தான் |
| **5.** | ராணிபூர் ஜாரெயலில் உள் கோயில்கள் | ஒடிசா |
| **6.** | கடாலியில் உள்ள விஷ்ணு கோவில் | உத்திரகாண்ட் |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

10. **106-வது இந்திய அறிவியல் மாநாட்டின் நோக்கங்களை எழுதுக.**

i) இந்திய அறிவியல் துறையை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல்

ii) இதற்கான நடவடிக்கைகள், பத்திரிக்கைகள், பரிவர்த்தனைகள் மற்றும் பிற வெளியீடுகள் போன்ற விரும்பத்தகுந்தவற்றை வெளியிடுதல்.

iii) இச்சங்கத்தில் உள்ள சொத்துக்களில் முழுவதையுமோ அல்லது சிறு பகுதியையோ விற்பதற்கான உரிமை உட்பட அறிவியல் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் நிதி மற்றும் மானியங்களை பாதுகாப்பாக நிர்வகித்தல்.

iv) மேற்கண்ட குறிக்கோள்களுக்குத் தேவையான செயல்கள், விஷயங்கள் மற்றும் பிற தேவைகளுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

11. **தேசிய மூங்கில் திட்டம் பற்றி எழுதுக.**

i) இந்த மூங்கில் திட்டமானது கிருஷ்ஷோணதி திட்டத்தின் கீழ் வரும் நிலையான விவசாயத்திற்கான தேசியத் திட்டத்தின் துணைத் திட்டமாகும்.

ii) மூங்கில் வளர்ப்பு மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றை அதிகரிப்பதன் மூலமும் பகுதி சார்ந்த ஒவ்வொரு பகுதியிலும் பல்வேறு வகை முறைகளைப் பயன்படுத்துதல் போன்றவைகளின் மூலம் மூங்கில் துறையை முழுமையான வளர்ச்சி பெறச் செய்தல்.

iii) மூங்கில் துறையை ஊக்குவிப்பதன் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானமும் அதனுடன் சேர்த்து மூங்கில் வளர்ச்சியையும் அடைவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

12. **தங்க நாணயமாக்கல் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் யாவை?**

i) முதலீட்டாளர்கள் இதற்காக நியமிக்கப்பட்ட வங்களில் தங்க சேமிப்பு கணக்கை ஏற்படுத்தி பிஐஎஸ் சான்றிதழ் மூலமாகவோ, தங்கத்தின் தூய்மைத் தன்மையை சோதனை செய்யும் மையங்கள் மூலமாகவோ எந்த ஒருவரும் தங்கத்தை சேமிப்புக் கணக்கில் சேர்க்கலாம். குறைந்தபட்சம் 30 கிராம் சேமிக்கலாம். இதற்கான அதிகபட்ச எல்லை வரம்பு இல்லை.

ii) தங்கத்தை குறைந்த காலம் (1-3 வருடங்கள்), நடுத்தர காலம் (5-7 வருடம்) மற்றும் நீண்ட காலம் (12 – 15 வருடங்கள்) ஆகிய முறைகளில் வைக்கலாம்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

iii) இத்திட்டம் முதிர்ச்சி அடையும் பொழுது குறுகிய கால முதலீட்டாளர்கள் பணமாகவோ அல்லது தங்கமாகவோ மற்றும் நீண்ட கால முதலீட்டாளர்கள் பணமாக மட்டும் பெற்றுக் கொள்ளலாம்.

iv) இத்திட்டத்தின் மூலம் வங்கிகளின் வாடிக்கையாளர்கள் தங்கள் கணக்கில் நிலையான காலத்திற்கு தங்கத்தை முதலீடு செய்யவும் அதற்கான வட்டி விகிதமாக 2.25 முதல் 2.50 சதவீதம் வரை பெற்றுக் கொள்ளவும் முடியும்.

13. **ஹீயூனார் ஹாட்ஸ் என்றால் என்ன?**

i) ஹீயூனார் ஹாட்ஸ் என்பது USTTAD (பாரம்பரிய கலை/கைவினை வளர்ச்சிக்காக திறன்கள் மற்றும் பயிற்சியளிக்கும் முறையை மேம்படுத்துதல்) திட்டத்தின் கீழ் சிறுபான்மையினருக்கான அமைச்சகத்தால் கொண்டு வரப்பட்டது.

ii) சிறுபான்மையினரின் பாரம்பரிய வளமான கலை/கைவினைத் திறன்களை பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தலே இதன் நோக்கமாகும்.

iii) தலைமுறை வாரியாக பாரம்பரிய தொழில்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் கைவினைஞர்கள், நெசவாளர்கள் ஆகியவர்களின் திறன் மேம்பாட்டை உறுதி செய்கிறது.

14. **ஆபரேஷன் சாகர் ராணி பற்றிய சமீபத்தில் வெளிவந்த தகவலைக் கூறுக.**

i) 2018 ஜூன் மாதம், கேரளாவின் கொல்லம் மாவட்டத்திலுள்ள எல்லை சோதனைச் சாவடியில் ஏறக்குறைய 9600 கி.கி. மீன்கள் பார்மலின் உபயோகப்படுத்தி பதப்படுத்தப்பட்டிருந்தது. அதை கேரள அரசின் உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தார்கள்.

ii) பறிமுதல் செய்யப்பட்டவைகிளல் 7,000 கி.கி இறாலும் 2,600 கி.கி மற்ற மீன்களும் இருந்தன.

iii) இப்பறிமுதலானது அம்மாநிலத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆபரேசன் சாகர் ராணியின் கீழ் நடந்தது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

15. **சாக்சம் 2019 என்றால் என்ன?**

i) சாக்சம் (சன் ரக்சன் ஷம்த மகோவத்வசம்) என்பது பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பெட்ரோலிய பாதுகாப்பு ஆராய்ச்சிக் கழகத்திற்கான தலைமைத் திட்டம்.

ii) சாக்சம் எண்ணெய் மற்றும் வாயுவுக்கான பொது நிறுவனங்கள் அதனுடன் கூடிய மாநில அரசு போன்ற பங்குதாரர்களை உள்ளடக்கியது.

iii) மக்கள் மைய நடவடிக்கைகள் மூலம் எரிபொருள் பாதுகாப்புக்கான கவனத்தை ஏற்படுத்துகிறது.

iv) மக்களுக்கு பெட்ரோலியம் பொருட்களை திறம்பட மற்றும் பாதுகாப்பாக உபயோகப்படுத்தி நல்ல உடல்நலன் மற்றும் சூழலை உருவாக்கும் வகையில் விழிப்புணர்வு உண்டாக்குதல்.

## *8 மதிப்பெண் வினாக்கள்*

1. **இந்தியாவின் 12 பல்லுயிரியல் இலக்குகள் யாவை?**

i) 2020 ஆண்டுக்குள் நாட்டின் மக்கள் தொகையில் குறிப்பாக இளைஞர்கள் பல்லுயிரியலின் விழுமியங்களையும் அதை பாதுகாக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் அதை நிலையான வகையில் உபயோகப்படுத்தும் முறையையும் தெரிந்து வைத்தல் வேண்டும்.

ii) 2020இல் பல்லியிரியலின் மதிப்புகள், தேசிய மற்றும் மாநில திட்டமிடுதல், மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வறுமை உத்திகள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கப்படுதல் வேண்டும்.

iii) அனைத்து இயற்கை வாழிடங்களிலும் சீரழிவு, வாழிடங்களைப் பிரித்தல் மற்றும் இடிப்பு ஆகியவற்றை குறைப்பதற்கான உத்திகள் முடிவு செய்யப்பட்டு சுற்றுச் சூழல் மாசுபாடு மற்றும் மனித நலனுக்கான நடைமுறைகளை 2020 ஆண்டுக்குள் எடுக்க வேண்டும்.

iv) 2020 ஆம் ஆண்டுக்குள் ஆக்கிரமிப்பு அந்நிய இனங்கள் மற்றும் அதன் பாதைகள் அடையாளம் காணப்பட்டு அதன் பெருக்கத்தை சரியான முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும்.

v) 2020க்குள், விவசாயம், காடுகள் மற்றும் மீன்பிடித்தல் ஆகியவற்றில் நிலையான மேம்பாட்டிற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுத்தல்.

vi) தரைப்பகுதி மற்றும் உள்நாட்டு நீர்ப்பகுதிகள் மற்றும் கடல் மற்றும் கடற்கரைப் பகுதிகளில் உள்ள முக்கியமான உயிரினங்கள், சூழல்

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

மண்டலம் மற்றும் பல்லுயிர்கள் ஆகியவை பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மற்றும் மற்றப் பகுதிகள் என்ற வகையில் பாதுகாக்கப்பட்ட வேண்டும். 2020க்குள் இவை ஒன்றிணைக்கப்பட்டு நிலப்பகுதி மற்றும் கடல் பகுதிகள் அதாவது 20% பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

vii) பல்வேறு மரபுகளைக் கொண்ட பயிரிடப்பட்ட தாவரங்கள், கால்நடைகள் மற்றும் அது தொடர்பான காட்டு உயிரினங்கள், சமூக-பொருளாதார மற்றும் கலாச்சார ரீதியில் முக்கியமாக உயிரினங்களின் மரபியல் பன்முகத்தன்மை அழிவு நிலையை குறைக்க தகுந்த செயல்முறைகளை 2020க்குள் எடுக்க வேண்டும்.

viii) சுற்றுச்சூழல் சேவைகளான தண்ணீர், உடல்நலம், வாழ்வாதாரம் மற்றும் மற்ற நலன்கள் ஆகியவற்றை பாதுகாத்தல். மேலும் உள்ளூர் மக்களில் உள்ள பெண்கள், குறிப்பிட்ட பாதிக்கப்பட்ட மற்றும் ஏழை மக்களை அடையாளம் கண்டு அவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை 2020க்குள் எடுத்தல்.

ix) தேசிய சட்டம் மற்றும் நகோயா நெறிமுறை ஆகியவற்றின்படி 2015க்குள் மரபணு ஆதாரங்கள் மற்றும் நியாயமான, சமமான பகிர்ந்தளித்தல் மற்றும் அதன் பயன்களை அனைவரும் பெறச்செய்தல் வேண்டும்.

x) 2020க்குள் பல்வேறு நிலையிலுள்ள ஆளுகைக்கான சிறந்த பங்கேற்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட தேசிய பல்லுயிர் செயல் திட்டம் வகுக்கப்பட்டு செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

xi) 2020க்குள் பல்லுயிர்களை மேம்படுத்துவதற்காக அங்கு பாரம்பரியமாக வசிக்கும் மக்களின் அனுபவத்தைப் பயன்படுத்தி புதிய முயற்சிகளை எடுத்தல் மேலும் சர்வதேச கட்டுப்பாடுகள் மற்றும் தேசியச்சட்டம் ஆகியவற்றின் மூலம் இம்மக்களின் பாரம்பரிய அறிவைப் பாதுகாத்தல்.

xii) 2020க்குள் நிதி, மனித மற்றும் தொழில்நுட்ப மூலங்களின் கிடைக்கும் தன்மையை அதிகரிக்கச் செய்து 2011-2020ன் மூலோபாய பல்லுயிருக்கான திட்டங்கள் மற்றும் தேசிய இலக்குகள் ஆகியவை கண்டறியப்பட்டு அவை பயனுள்ள வகையில் செயல்படுத்தப்படுதல் வேண்டும். மேலும் ஆதாரங்களைத் திரட்டும் உத்திகளையும் பெறுதல் வேண்டும்.

**2. விண்வெளி நடவடிக்கைகள் மசோதா 2017-ன் முக்கிய அம்சங்களைப் பற்றி எழுதுக.**

i) இது இந்திய விண்வெளி நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும் ஒழுங்குபடுத்தவும் முன்மொழியப்பட்ட மசோதாவாகும்.

ii) இம்மாசோதாவானது, விண்வெளித் துறையின் உதவியினைப் பெற்று அரசின் வழிகாட்டுதல் மற்றும் அங்கீகாரத்தின் மூலம் அரசு சாரா/ தனியார் நிறுவனங்களை இந்திய விண்வெளி நடவடிக்கைகளில் பங்கெடுக்கவைப்பதை ஊக்குவிக்கிறது.

iii) இச்சட்ட விதிகள் ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் மற்றும் இந்தியாவிலுள்ள அல்லது இந்தியாவிற்கு வெளியில் அமைந்துள்ள விண்வெளி நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடிய அனைத்து துறைகளுக்கும் ஏற்புடையதாகும்.

iv) மத்திய அரசால், வணிகரீதியிலான விண்வெளி சார்ந்த நடவடிக்கைகளை எடுக்கும் எவருக்கும் மாற்ற இயலாத உரிமம் வழங்கப்படும்.

v) உரிமம் வழங்குவதற்கான சரியான வழிமுறை, தகுதி மற்றும் உரிமத்திற்கான கட்டணம் ஆகியவை பற்றிய விவரங்களை மத்திய அரசு அறிவிக்கும்.

vi) நாட்டின் விண்வெளி செயல்முறைகளை அதிகப்படுத்தவும் மற்றும் அரசானது அனைத்து விண்வெளித் திட்டங்கள் (புவியில் உள்ள அனைத்து முடிந்த மற்றும் திட்டமிடப்படும் விண்வெளி செயல்பாடுகள்) பற்றிய ஒரு பதிவையும் எடுத்து பராமரிக்க வேண்டும்.

vii) மேலும் இது தொழில் சார்ந்த மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வணிகரீதியான விண்வெளி செயல்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு அளித்தல், வேண்டுதல் மற்றும் விண்வெளி சார்ந்த நடவடிக்கைகளுக்கான கட்டுப்பாட்டை விதிக்க வேண்டும்.

viii) நடத்தப்படும் ஒவ்வொரு இந்திய விண்வெளி செயல்பாடுகளையும் கண்காணித்தல் மற்றும் அதற்கான பாதுகாப்பு முறைகளை அளித்தல், மற்றும் விண்வெளி செயல்பாடுகள் பற்றிய நிகழ்வுகள் அல்லது விபத்துகள் போன்றவற்றை விசாரணை செய்தல்.

ix) விண்வெளி செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றால் பரிந்துரைக்கப்பட்ட முறையில் ஒரு நபராலோ (அ) நிறுவனத்தாலோ உருவாக்கப்பட்ட பொருட்களின் விலை விவரங்களை இத்திட்டத்தின் மூலம் அறியலாம்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

x) எந்தவொரு நபரும் அங்கீகாரம் பெறாமல் வணிகரீதியாக விண்வெளி நடவடிக்கையில் ஈடுபட்டால் அவர்களுக்கு அதிகபட்சமாக 3 வருட சிறை தண்டனையோ அல்லது 1 கோடிக்கும் மேல் அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாகக் கிடைக்கும்.

**3. ஆதார் மற்றும் பிற சட்டங்களுக்கான சட்டத்திருத்த மசோதா 2018-ன் முக்கிய அம்சங்களை ஆய்வு செய்க.**

**i) ஆதார் எண் வைத்திருப்பவர்களை ஆப்லைனில் சரிபார்த்தல்** :
இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் கட்டுப்பாடுகளின் படி தனிநபரின் அடையாளத்தை அங்கீகாரம் பெறாமலே ஆ∴ப்லைனில் சரிபார்க்க இம்மசோதா ஒப்புதலளிக்கிறது.

ii) <u>அடையாள சரிபார்த்தலுக்கு ஆதாரை விருப்பமுடன் உபயோகித்தல் :</u>
விருப்பப்பட்டவர்கள் ஆ∴ப்லைன் சரிபார்த்தல் மூலம் தங்கள் அடையாளமாக ஆதார் எண்ணை உபயோகிக்கலாம் என்று இம்மசோதா கூறுகிறது.

**iii) நிறுவனங்களுக்கான ஆதார் உபயோகம்** :
(i) தனியுரிமை மற்றும் பாதுகாப்பு குறித்த சில தரநிலைகளுடன் இணங்குதல் அல்லது (ii) சட்டத்தின் மூலம் அனுமதியளித்தல் அல்லது (iii) மாநிலங்களின் விருப்பத்திற்கு ஏற்ப, மத்திய அரசால் குறிப்பிடப்படுள்ளவைகளின் படி குறிப்பிட்ட நோக்கத்திற்காக அங்கீகாரம் தேடுதல், UIDAIயின் இம்மூன்றையும் நிறைவு செய்தால், நிறுவனங்களை ஆதார் சரிபார்ப்புக்கு அனுமதிக்கலாம்.

**iv) குழந்தைகளுக்கான ஆதார் எண்** :
குழந்தைகளுக்கான ஆதார் எண் பதியும் பொழுது, அந்நிறுவனம் அக்குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். மேலும் (i) பதியப்படும் தகவல்கள் எவ்வகையில் உபயோகப்படுத்தப்பட போகின்றன. (ii) பகிரப்படும் நபர்கள் மற்றும் (iii) அக்குழந்தை 18 வயதையடைந்தவுடன் தகவலைப் பெறும் உரிமை, மேலும் அக்குழந்தை விரும்பினால் ஆதாரை ரத்து செய்யலாம் என்பன போன்ற விவரங்கள் குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் கண்டிப்பாக தெரியப்படுத்தப்பட வேண்டும்.

**v) குறிப்பிட்ட சில விவகாரங்களின் தகவல்களை வெளிப்படுத்துதல்:**
இச்சட்டத்தின் படி ஆதார் சம்மபந்தப்பட்ட பாதுகாப்பு மற்றும் இரகசியத் தன்மைக்கான கட்டுப்பாடுகள், மாவட்ட நீதி மன்றங்களின்

(அல்லது அதற்கு மேல் உளள நீதிமன்றங்கள்) உத்தரவின் பேரில் வெளிப்படுத்தலாம்.

**vi) இந்திய தனித்துவ அடையாள ஆணைய (UIDAI) நிதி** :

இச்சட்டத்தின் கீழ் UIDAIயின் கீழ் பெறப்படும் கட்டணம், வரி போன்றவை இந்திய ஒருங்கிணைந்த நிதியில் சேர்க்கப்படும். ஆனால் இம்மசோதாவானது அவை இந்திய தனித்துவ அடையாள ஆணைய நிதியில் சேர்க்கப்பட வேண்டுமெனக் கூறுகிறது.

**vii) புகார்கள்** :

மேலும், இம்மாசோதா, ஆள்மாறாட்டம் அல்லது தகவல்களை வெளியிடுதல் போன்ற தவறுகளுக்கு புகார் அளிக்கும் முறையைப் பற்றிக் கூறுகிறது. மேலும் இம்மசோதா பதிவு செய்யும் நிறுவனங்கள், கோரிக்கை வைக்கும் நிறுவனங்கள் மற்றும் ஆஃப்லைனில் சரிபார்த்தலுக்கான அனுமதி கோரும் நிறுவனம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஆதார் மண்டலத்திற்கான வரையறையை அளிக்கிறது.

**viii) அபராதம்** :

(i) UIDAIயின் வழிமுறையைப் பின்பற்றாமல் இருத்தல் மற்றும் (ii) UIDAI-க்கு தேவையான தகவல்களை அளிக்கமாலிருத்தல் போன்ற காரணங்களுக்கான UIDAI நிறுவனங்களுக்கெதிரான புகார்களை முன்வைக்கலாம். UIDAI-ஆல் நியமிக்கப்பட்ட ஆணையக அதிகாரிகளால் அந்நிறுவனங்களுக்கு 1 கோடி வரை அபராதம் விதிக்கலாம்.

**4. வீட்டுப் பணியாளரின் நலன் காக்கும் தேசியக் கொள்கை பற்றி விவரி.**

i) வீட்டுப் பணியாளர்களை வன்முறை, தவறாக நடத்துதல் மற்றும் துன்புறுத்துதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு அளித்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு, குறைந்தபட்ச ஊதியம் ஆகியவற்றிற்கு உத்திரவாதம் அளித்தலே இதன் நோக்கமாகும்.

ii) மேலும் இக்கொள்கையில் சமூக பாதுகாப்பளித்தல், பாலியல் வற்புறுத்தல் மற்றும் கொத்தடிமை முறை ஆகியவற்றை எதிர்த்தல் போன்றவை அடங்கியுள்ளன.

iii) இது ஒரு, நிலையான ஊதிய முறைக்கான வாரியம் உருவாக்கி அனைத்து விதமான வீட்டு வேலை செய்பவர்களையும் அதன் கீழ் கொண்டு வரும் தேசியத் திட்டமாகும். மேலும் இந்த வாரியமானது அனைத்து பங்குதாரர்களாலும் நிர்வகிக்கப்பட வேண்டும்.

iv) சமூக பாதுகாப்பை ஏற்படுத்த, நியாயமான வேலைவாய்ப்பு முறைகள், குறைகளைக் களைதல் மற்றும் பிரச்சனைகளைத் தீர்க்கும் முறைகள் ஆகியவற்றுடன் கூடிய நிறுவனத்துக்கான அனைத்து பண்புகளையும் அடையும் எண்ணம் கொண்டதே இக்கொள்கையின் நோக்கமாகும்.

v) வீட்டுவேலை பணியாளர்கள் தங்களை பணியாளர்கள் மாநில தொழிலாளர் துறை அல்லது மற்ற சரியான துறைகளில் பதிவு செய்து முறையான வீட்டு வேலை பணியாளர்களை அடையாளப்படுத்திக் கொள்ள வழி வகுக்கிறது.

vi) மேலும் இக்கொள்கை அவர்கள் தங்களுக்கென தொழிற்சங்கம்/ஒன்றியம் ஏற்படுத்தவோ மற்றும் மற்ற தொழிற்சங்ககளில் இணையவோ ஊக்குவிக்கிறது.

vii) இது நன்கு வரையறுக்கப்பட்ட வேலை காலம் மற்றும் ஓய்வு ஆகியவை அடங்கிய மாதிரி ஒப்பந்தத்தை அளிக்கிறது.

viii) இக்கொள்கை ஆட்சேர்ப்பு மற்றும் வேலைவாய்ப்பு அளிக்கும் நிறுவனங்களை கொள்கை உருவாக்கத்தின் மூலம் அந்தந்த அரசால் கட்டுப்படுத்தப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ix) மேலும் இது மத்திய, மாநில மற்றும் மாவட்ட நிலையிலுள்ள முத்தரப்பு அமலாக்கக் குழுவைப் பெற்றிருக்க வேண்டும்.

x) இது, பகுதிநேர தொழிலாளர்கள், முழுநேர தொழிலாளர்கள், முதலாளிகள் மற்றும் தனியார் வேலைவாய்ப்பு நிறுவனங்கள் என தெளிவான வரையறையைக் கொண்டிருக்க வேண்டும்.

**5. டி.என்.ஏ தொழில்நுட்பம் (பயன்கள் மற்றும் பயன்படுத்தும் முறை) திருத்த மசோதா 2018-ஐப் பற்றி எழுதுக.**

i) இம்மசோதா, சந்தேகத்திற்குள்ளானவர்கள் மற்றும் விசாரணைக் கைதிகள் போன்ற வரையரைக்குட்பட்டவர்களின் அடையாளங்களை கட்டுப்பாடுகளுக்குட்பட்ட டி.என்.ஏ. தொழில்நுட்பத்தின் மூலம் கண்டறிய உதவுகிறது.

ii) டி.என்.ஏ. ஆய்வகங்களுக்கான அங்கீகாரம் மற்றும் ஒழுங்குமுறைகளை வழங்குவதன் மூலம் இம்மசோதாவானது இத்தொழில்நுட்பத்தை நாட்டில் அதிகப்படுத்த வழி செய்கிறது.

iii) குடிமக்களின் தனியுரிமைச் சட்டத்தின்படி டி.என்.ஏ ஆய்வு முடிவுகள் நம்பகத் தன்மை உடையதாகவும், தகவல்கள் பாதுகாக்கப்பட்டவைகளாகவும் இருத்தல் வேண்டும்.

iv) இம்மசோதாவின் படி தேசிய மற்றும் பிராந்திய டி.என்.ஏ. தகவல் வங்கிகள் ஏற்படுத்தப்பட்டு, பாதிக்கப்பட்டோர்கள், குற்றவாளிகள், விசாரணைக் கைதிகள், காணாமல் போனவர்கள் மற்றும் அடையாளம் காணமுடியாத மனித உடற்பாகங்கள் ஆகியவற்றை கண்டறிய உதவும் வகையில் தேசிய தகவல்களை சேமித்து வைக்க வேண்டும்.

v) **தண்டனை** : இம்மசோதாவின்படி டி.என்.ஏ. ஆராய்ச்சிக்குட்பட்ட நபர்களின் தகவல்களை மற்றவர்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ சட்ட விரோதமான முறையில் தெரியப்படுத்துவோருக்கு 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை மற்றும் 1 இலட்சம் வரை அபராதம் விதிக்கப்படும். இதே தண்டனை தகவல்களை சட்டவிரோதமாக கேட்பவர்களுக்கும் அளிக்கப்படும்.

vi) **பயன்பாடுகள்** : அனைத்து டி.என்.ஏ. விவரங்களும் அதாவது டி.என்.ஏ. விவரங்கள், மாதிரிகள் மற்றும் பதிவுகள் அடையாளம் கண்டுபிடிக்க மட்டுமே உபயோகப்படுத்த வேண்டும் வேறு எந்த வகையிலும் இதனைப் பயன்படுத்தக் கூடாது.

vii) காணாமல் போனவர்களின் டி.என்.ஏ.வை, கண்டறிய முடியாத அளவுக்கு சிதைத்த உடல் பாகங்களை உடைய மனித உடல்களுடன் அடையாளர் காணும் பொருட்டு பொருத்திப் பார்க்கும் முறைக்கு இம்மசோதா அனுமதி அளிக்கிறது. மேலும் பேரழிவின் போது பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணவும் இது உதவுகிறது.

viii) டி.என்.ஏ. ஆய்வகங்களுக்கு உதவும் வகையில் டி.என்.ஏ. மாதிரிகளை ஆய்வு செய்து தனிமனிதரின் அடையாளங்களைக் கண்டறிய டி.என்.ஏ. ஒழுங்குமுறை ஆணையம் ஒன்றினை ஏற்படுத்த இம்மசோதா அறிவுறுத்துகிறது.

**6. பின்வருவனவற்றை விவரி.**

**a) தனிப்பட்ட சட்டத்திருத்த மசோதா 2018-ன் பற்றிய முக்கியத்தும் பற்றி எழுதுக.**

i) விவாகரத்திற்கு தொழுநோய் ஒரு காரணமாக இருத்தலை ஒழித்தல்.

ii) இம்மசோதாவானது தொழுநோயாளிகளை சமூகத்தின் பொது நீரோட்டத்துடன் இணைக்க உதவுகிறது.

iii) “தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களுக்கு எதிராகக் காட்டப்படும் பாகுபாட்டை ஒழித்தல்”

என்னும் ஐ.நா.பொதுச்சபை ஒழுங்குமுறையை இம்மசோதா பின்பற்றுகிறது.

iv) முன்மொழியப்பட்ட சட்டமானது, தேசிய மனித உரிமைகள் ஆணையம், பத்தாண்டுக்கு முன்பு பரிந்துரைத்த தனிப்பட்ட சட்டங்கள் மற்றும் பிற சட்டங்களை திருத்தப்பட வேண்டுமென்ற முறையை பின்பற்றுகிறது.

**b) துண்டிக்கும் உரிமைக்கான மசோதா 2018-ன் முக்கியத்துவத்தைக் கூறுக.**

i) இம்மசோதா தொழிலாளரின் தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் தொழில் சார்ந்த வாழ்க்கைக்கு இடையே அழுத்தம் மற்றும் பதட்டத்தை குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ii) இம்மசோதா தொழிலாளர்களுக்கு, அலுவல் நேரங்களைத் தவிர மற்ற நேரங்களில் வேலை தொடர்பாக வரும் தொலைபேசி அழைப்புகள் அல்லது வேறுஎந்த வகையிலான தொடர்புகளுக்கும் பதிலளிக்கத் தேவையில்லை என்ற உரிமை அளித்துள்ளது.

iii) வேலை நேரங்களைத் தவிர மற்ற நேரங்களில் தொழிலாளர்கள் உபயோகப்படுத்தும் டிஜிட்டல் உபகரணங்களால் ஏற்படும் தாக்கத்தை வெளியிடுவதற்காக தொழிலாளர் நல ஆணையம் என்ற அமைப்பை ஏற்படுத்த வேண்டும். மேலும் தொழிலாளர் - முதலாளிகளுக்கிடையேயான பேச்சு வார்த்தைக்கான வரையறுக்கப்பட்ட பட்டயத்தை ஏற்படுத்த வேண்டும்.

iv) இம்மசோதாவின் படி 10 பணியாளர்களுக்கும் அதிகமான தொகை கொண்ட நிறுவனங்கள் அவ்வப்போது பணியாளர்களிடம் குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் அவர்களுக்கான பட்டியல் தயாரித்தல் மற்றும் தொழிலாளர்களைப் பிரதிநிதியாகக் கொண்ட பணியாளர் நலக்குழுவை அமைத்தல் போன்றவற்றை செய்து தரல் வேண்டும்.

**7. போதைப் பொருளுக்கான தேவையை குறைத்தலுக்கான தேசிய செயல் திட்டம் பற்றி விவரி.**

i) இத்திட்டமானது சமூக நீதி மற்றும் அதிகாரமளிக்கும் அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.

ii) பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தவர்களுக்கு கல்வி, மறுவாழ்வு போன்ற பல்நோக்கமுள்ள நலத்திட்டங்களை

ஏற்படுத்தி அவர்களை பிரச்சனைகளிலிருந்து வெளியில் கொண்டு வர வேண்டும்.

iii) போதைப் பொருள் சார்ந்து இருப்பவர்களுக்கான தடுப்புக்கல்வி, விழிப்புணர்வு ஏற்படுத்துதல், ஆலோசனை, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு ஆகியவை அளிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். மேலும் மத்திய, மாநில மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் கூட்டு முயற்சியால் திறன் மற்றும் பயிற்சியளித்தல் ஆகியவை அளிக்க வேண்டும்.

iv) மயக்க மருந்து, வலி நிவாரணி மற்றும் தசைமாற்று நிவாரணி மருந்துகள் போன்றவற்றை கட்டுப்படுத்துவதற்காக நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல். இச்செயல்திட்டத்தில் விழிப்புணர்வு திட்டங்கள் மற்றும் இணையதளம் மூலம் விற்கப்படும் மருந்துகளை கவனமாக கண்காணிக்க சைபர் அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

v) சமூக வலைத்தளம் டிஜிட்டல் தளம் மற்றும் இணையதளம் வழியாக விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் பிரபலங்களின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல். போதைப் பொருள் தடுப்புக்காக தேசிய இலவச எண்ணை அறிமுகப்படுத்துதல்.

vi) கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள், இயக்குனர்கள், துணை வேந்தர் போன்றவர்களை தங்கள் கல்வி நிறுவங்களுக்குள்ளேயும் அருகிலும் போதைப் பொருள் விற்கப்படவில்லையென உறுதிசெய்யச் செய்தல்.

vii) போதைப் பொருள் தடுப்பிற்காக பஞ்சாயத்துராஜ் நிறுவனம், நகர்புற உள்ளாட்சி அமைப்புகள், நேரு யுவகேந்திரா சங்கரன், மற்றும் பிற சிறு அமைப்புகளான மகிள மண்டலங்கள், சுய உதவிக்குழுக்கள் ஆகியவற்றுடன் சேர்ந்து மக்களும் ஒத்துழைப்பு தரவேண்டும்.

viii) இச்செயல்திட்டத்தை செயல்படுத்த சமூக நீதி அமைச்சகம், மற்றும் பல அமைச்சகங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட மற்றும் செயலாளரின் கீழ் அமைந்த ஒரு வழிகாட்டும் குழுவை ஏற்படுத்தி கண்காக்கபடல் வேண்டும்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## 30 மதிப்பெண் வினாக்கள்

1. **தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் புத்தாக்க படைத்தல் கொள்கை 2018-2023 - விவரி.**

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்துறைக்கான துறையால் வெளியிடப்பட்டது.

**இலக்கு** : 2023-ன் நோக்கமானது வரும் வருடங்களில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் தமிழகத்தின் வளர்ச்சி நிலையாக ஆண்டுக்கு 11% இருத்தல் வேண்டும்.

**நோக்கம்** :

i) 2023க்குள் தமிழகத்தை உலகளாவிய கண்டுபிடிப்பு மையமாக்க வேண்டும் மற்றும் தொழில் தொடங்குவதற்கு தமிழகத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட இடமாக மாற்றுதல்.

ii) மாநிலத்தில் செயல்படுத்தக்கூடிய புத்தாக்க சூழலை வழங்குதல்.

iii) இக்கொள்கையை செயல்படுத்துவதனால் மாநிலமானது அறிவுசார் தலைமையகமாகவும், புத்தாக்க மண்டலமாகவும் உருவெடுக்கும்.

iv) இது, உலகம் முழுவதும் உள்ள தொழில்முனைவோர்கள் மற்றும் முதலீட்டாளர்களை கவரும் வண்ணம் உள்ளது.

**முதன்மை பொறுப்பு நிறுவனம்** :

i) தொழில் முனைவு மற்றும் புத்தாக்க நிறுவனமானது மாநிலத்தில் ஸ்டார்ட் அப்களை ஊக்குவிக்கவும் எளிமையாக்குதலுக்குவதற்கும் முதன்மை பொறுப்பு நிறுவனமாகச் செயல்படும்.

தொழில் முனைவு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை ஊக்குவிக்குதல் தொடர்பான சூழலை உருவாக்குதல்.

i) தமிழகம் அறிவியல் மற்றும் பொறியியல் திறன் அதிகம் கொண்ட மாநிலமாகும்.

ii) இந்த உள்நாட்டு அறிவுசார்ந்த மூலதனமானது, பின்வரும் செயல்திட்டங்களின் மூலம் தொழில்முனைவிற்கான முயற்சியை உருவாக்குவதற்காக, உறுதிப்படுத்தப்பட்டு ஊக்குவிக்கப்படும்.

**வியாபாரத்தை எளிதாக்குதல்**

i) பதிவு செய்தல், புகார்கள் மற்றும் சான்றளித்தல் போன்றவைகளை எளிதாக்க One-Stop-Shop என்ற இணையதளத்தையும், உதவி மையத்தையும் ஏற்படுத்த வேண்டும்.

ii) இணையதளத்தில் தொழில்துவங்க பதிவு செய்பவர்களுக்கு 15 நாட்களுக்குள் TANSIM அங்கீகாரமளிக்க வேண்டும்.

iii) தொழில் தொடக்கத்திற்கு இணையதள குறை தீர்க்கும் அமைப்பு அவ்வப்போது பதிலளிக்க வேண்டும்.

**கொள்கையை எளிமையாக்குதல்**

i) ஏற்கனவே இருக்கும் தொழிலாளர் சட்டங்கள் மற்றும் தொழில்நுட்பங்களுக்கான ஒழுங்குமுறைகள் சரிபார்த்து எளிமையாக்கப்படும்.

ii) EPFO, ESIC குறைந்தபட்ச ஊதியமாவது வழங்குதல், ஊக்க ஊதியம், பணிக்கொடை இது போன்ற தொழில் நுட்ப ஒழுங்குமுறைகள் இல்லாவிடினும் ஸ்டார்அப்களின் சுயசான்றிதலளிக்கும் முறையை அனுமதிக்க வேண்டும்.

iii) நீராவிக் கொதிகலன் தொடர்பான சட்டங்கள், தொழிற்சாலை சட்டம் மற்றும் தமிழ்நாடு உயர்த்திகள் சட்டம் போன்றவற்றின் தொழில்நுட்ப ஒழுங்குமுறைகள் மூன்றாம் தரப்புச் சான்றளித்தலுக்கு மட்டுமே தேவைப்படுகிறது.

**மானியங்கள்**

i) TANSIM ஆனது மாநிலம் முழுவதுமுள்ள புகழ்பெற்ற நிறுவனங்கள், கல்லூரிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவைகளுடன் கூட்டுச் சேர்ந்து பல நிகழ்ச்சிகளை நடத்துகின்றன.

ii) BIRAC, DSTINSTEBB, CSIR, DEITY மற்றும் GITA போன்ற நிறுவனங்களுடன் தொழில்துறை, புத்தாக்கச் செயல்முறை உருவாக்கம் போன்றவற்றிற்கு கல்வி நிறுவனங்களும் ஆராய்ச்சியில் ஈடுபடுதல்.

iii) CSR ஒழுங்குமுறைகளின் படி பெருநிறுவனங்கள், மத்தியரசு நிறுவனங்கள் மற்றும் மாநில அரசு நிறுவனங்கள் ஆகியவை புதிய தொழில் தொடங்கும் திட்டங்களுக்கு நிதியுதவி அளித்தல் வேண்டும்.

iv) மாநில அரசு SLBC மற்றும் முன்னணி வங்கிகளின் கிளைகளை ஸ்டார்அப் மற்றும் MSME-க்கு உதவும் வகையில் அமைக்கும் படி கேட்டுக் கொள்ள வேண்டும்.

v) மேலாளர்களை ஈர்ப்பதற்காக அறிமுகத் திட்டங்கள் நடைபெற வேண்டும். ஸ்டார்ட்அப்களின் சந்தைப்படுத்துதல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செயல்முறைகளை TANSIM ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

நேர்மறையான சமூக விளைவுகள் மற்றும் சேர்க்கைக்கான சமூக விளைவுகள் மற்றும் சேர்க்கைக்கான சமூகத் தொழில்முனைவுக்கு ஆதரவளித்தல்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

i) தமிழ்நாடு ஒரு வளர்ந்த மாநிலம் ஆகும் மற்றும் சமூக உட்சேர்க்கையே அதன் நிலையான வளர்ச்சிக்கும் காரணம் ஆகும்.

ii) அதிகளவு சமூக நிலைத்தன்மைக்காக பெண்கள், மாற்றுத் திறனாளிகள், மாற்று பாலினத்தவர் மற்றும் பொருளாதார ரீதியாக உரிமை இழந்தோர் ஆகியோர்களுக்கு சமமான தளத்தை வழங்க வேண்டிய அவசியம் எப்போதும் உள்ளது.

**தமிழ்நாடு அரசு பின்வரும் ஆதரவுகளை அளிக்கும் நோக்கம் கொண்டுள்ளது.**

i) சுற்றுச்சூழலுக்கு உகந்த பசுமை ஸ்டார்ட் அப்களாக உள்ள ஸ்டார்ட் அப்களுக்கு திட்டமானது கூடுதல் ஆதரவை நீடிக்கும்.

ii) இத்திட்டமானது, நீர், கழிவு மேலாண்மை, சுகாதாரம், உணவு, கல்வி, பருவநிலை மாற்றம் முதலியன போன்ற பகுதிகளில் சமூகத்தாக்கங்களை உருவாக்குகின்ற ஸ்டார்ட்அப்களுக்கு துணிகர நிதியின் ஒரு பங்கினை ஒதுக்குவதன் மூலம் சிறந்த கவனம் செலுத்த முடியும்.

iii) இத்திட்டமானது சமூகத் தாக்கத்தை மையப்படுத்திய நடவடிக்கைகளில் மாணவர் பங்களிப்பை ஊக்குவிக்கும்.

iv) இத்திட்டமானது துணிகர நிதியளித்தல் மூலமாக ஊரக தொழில் முனைவை ஊக்குவித்து கிராமப்புற ஸ்டார்ட்அப்களுக்கும் தொழில் ஊக்கிகளுக்கும் ஆதரவளிக்கும்.

v) ஹேக்காதான் நிகழ்வுகளின் மூலம் ஏற்படும் சமூக, ஊரக மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளை சமாளிக்க வேண்டும்.

vi) மானியங்கள் அளிப்பதன் மூலம் புதுமையான கண்டு பிடிப்புகளையும் இதைத் தொடர்ந்து நிதியுதவி அளிப்பதன் மூலம் சோதனை யோசனைகளையும் ஊக்குவிக்க வேண்டும்.

vii) கிராமப்புற/சமூக தொழில்முனைவோரால் உருவாக்கப்படும் தொழில்நுட்பங்கள்/மாதிரிகளை ஏற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் ஒரு வழிமுறையை உருவாக்க வேண்டும்.

**பெண்கள்**

i) பெண்களால் தொடங்கப்படும் தொழில்களுக்கு முன்னுரிமை வழங்குதல்.

ii) பெண்கள் தொழில்முனைவோருக்கான பயிற்சி மற்றும் நம்பிக்கை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை ஏற்படுத்துதல்.

iii) பெண்களை நிறுவனர்களாகவோ அல்லது இணைநிறுவனர்களாகவோ வைத்து தொடங்கும் தொழிலகங்களுக்கு அவர்களின் உற்பத்திப்

பொருட்கள் வளர்ச்சி மற்றும் சந்தைப்படுத்துதல்/விளம்பரம்/ கண்காட்சிகளின் பங்கேற்பு போன்றவைகளுக்கு உதவி செய்ய வேண்டும்.

iv) மகளிர் தொழிற்துறை நிறுவனங்களுக்குத் தொழிற்பேட்டைகளில் இடம் ஒதுக்குவதற்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும்.

v) தொழிற்துறை நிறுவனங்களில் 50 பணியாளர்களுக்கு மேல் இருந்தால் பகல் நேரக் குழந்தைகள் காப்பகம் / இன்குபேட்டர் / போதிய இடவசதி ஆகியவை ஏற்படுத்தித் தர வேண்டும்.

vi) பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதலுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

**திருநங்கைகள்**

i) திருநங்கைகளை நிறுவனர் அல்லது இணை நிறுவனர்களாகக் கொண்ட தொழிற்துறை நிறுவனங்களை ஊக்குவித்தல்.

ii) திருநங்கைகள் தொழில்முனைவோர்களுக்குப் பயிற்சியும், நம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகளையும் உருவாக்குதல்.

iii) தொழில்முனைவோர் மற்றும் தொழில்மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆதரவளித்தல்.

iv) கொள்முதல் மற்றும் சந்தைப்படுத்துதலில் முன்னுரிமை அளித்தல்

v) திருநங்கைகள் மேம்பாட்டிற்காக உருவாக்கப்படும் நிறுவனங்களுக்கு உதவுதல்.

**மாற்றுத்திறனாளிகள்**

i) நிறுவனர் அல்லது துணை நிறுவனர் மாற்றுத் திறனாளியாக உள்ள ஸ்டார்ட் அப்களை ஊக்குவித்தல் மற்றும் அவற்றிற்கு உதவுதல்.

ii) மாற்றுத்திறனாளி தொழில்முனைவோருக்காக தொழில்முனைவில் பயிற்சி மற்றும் உணர்திறன் திட்டங்கள்.

iii) கொள் முதல் மற்றும் சந்ததைப்படுத்துதலில் முன்னுரிமை அளித்தல்.

iv) மாற்றுத் திறனாளி பிரிவில் பணிபுரிகின்ற ஸ்டார்ட் அப்களும் ஆதரவிற்கு தகுதியானதாகும்.

**விலக்குகள்**

i) மாநிலத்தில் ஏற்கனவே உள்ள நிறுவனங்களின் கிளைகள்.

ii) மாநிலத்தில் உள்ள தொழில்துறை குழுவின் வருவாய் 300 கோடியை மிஞ்சுகின்ற தொழில்துறை குழுவால் ஊக்குவிக்கப்பட்ட அல்லது நிதியளிக்கப்பட்ட அல்லது அக்குழு தொடர்புடையவர்களுக்கு தொழில்துறை நிறுவனங்களில் ஆண்டு

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

வருமானம் ரூபாய் 300 கோடிக்கு மேல் உள்ள நிறுவனங்களின் ஆதரவில் / ஊக்குவிப்பில் உருவாகும் நிறுவனங்கள்.

iii) அந்நிறுவனத்தின் வருமானம் 50%கும் மேல் முதலீடுகள் மற்றும் கடன்களின் மூலம் பெறப்பட்டால் அந்நிறுவனத்திற்கு சலுகை வழங்கப்படாது.

**செயல்படுத்தும் முறை**

i) செயல்முறைப்படுத்துதலுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் விளக்கங்கள் அவ்வப்போது வழங்கப்படும்.

ii) முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் ஒரு முறை TANSIL மூலம் இத்திட்டத்தின் செயல்திறன் சரி பார்க்கப்படும்.

iii) இக்கொள்கைகளில் திருத்தம் செய்வதென்றால் அமைச்சரவையின் அனுமதியோடு செய்ய வேண்டும். ஆனால் அது ஏற்கனவே இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளை பாதிக்கக் கூடாது.

iv) 5 வருடங்களுக்கு ஒரு முறை இக்கொள்கைகள் சரிபார்க்கப்பட வேண்டும்.

2. **மத்திய இடைக்கால நிதிநிலை அறிக்கை 2019-2020ஐப் பற்றி சுருக்கமாக விவாதி.**

i) இந்திய அரசியலமைப்பின் சரத்து 112-ன் படி, குறிப்பிட்ட ஒரு வருடத்திற்காக மதிப்பிடப்படும் வரவு மற்றும் செலவுக்கான அறிக்கையே நிதிநிலை அறிக்கையாகும்.

ii) மேலும் இது வருடாந்திர நிதிநிலை அறிக்கையென்றும் அழைக்கப்படுகிறது.

iii) வருவாய் நிதியறிக்கை மற்றும் மூலதன நிதியறிக்கை என இது இருவகைப்படும்.

iv) நிதியறிக்கை 3 தகவல் தொகுப்புகளை அளிக்கிறது.

a. முந்தைய ஆண்டின் உண்மையான தரவு

b. நடப்பு ஆண்டின் தற்காலிக தரவு

c. வரவிருக்கும் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

**2030ஆம் ஆண்டின் தொலைநோக்குப் பார்வைக்கான 10 அம்சங்கள்**

இந்தியாவானது நவீனத் தொழில்நுட்ப வளர்ச்சி, அதிக வளர்ச்சி, நியாயமான மற்றும் வெளிப்படையான சமூகத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

i) **எளிதான வாழ்க்கை** : சமூகக் கட்டமைப்புகள் மற்றும் கட்டிடக் கட்டமைப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

ii) **டிஜிட்டல் இந்தியா** : இளைய தலைமுறையினரைத் தலைவர்களாகக் கொண்ட டிஜிட்டல் மயமாக்கப்பட்ட செயல்முறைகளை உருவாக்குதல்.

iii) **மாசுபாடற்ற இந்தியா** : மின்சார வாகனங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களைப் பயன்படுத்துதல் மூலம் போக்குவரத்தில் புரட்சியை ஏற்படுத்துதல்.

iv) **ஊரகத் தொழில் மயமாக்கல்** : அதிகளவு வேலைவாய்ப்பை உருவாக்க நவீன டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்.

v) **நீர் வளங்கள்** : ஆறுகளைத் தூய்மையாக்குதல், பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் மற்றும் சொட்டு நீர் பாசனத்தின் மூலம் தண்ணீரின் முழுப் பயன்பாட்டினைப் பெறுதல்.

vi) **திறன்மிகு கடற்கரை** : சாகர்மாலா திட்டத்தை மேம்படுத்துதல் மேலும் கடற்கரை மற்றும் பெருங்கடல் மூலம் செயல்படும் திட்டங்களை மேம்படுத்தி இந்தியாவின் வளர்ச்சியை ஊக்குவித்தல்.

vii) **விண்வெளித் திட்டம்** : ககன்யான் எனும் திட்டத்தின் மூலம் மற்ற நாட்டு செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவக்கூடிய தளமாகவும் இருப்பதோடு, இந்திய விண்வெளி வீரர்களையும் 2022 ஆம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பவுள்ளது.

viii) **உணவுப் பாதுகாப்பு** : உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுதல், உலக மக்களின் உணவுத் தேவைக்காக உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்தல் மற்றும் பெரும்பாலும் இயற்கை முறையிலேயே உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தல்.

ix) **வளமான இந்தியா** : ஆயுஸ்மான் பாரத்திட்டத்தின் மூலம் பெண்கள் தங்களுக்கான அதிகாரம் மற்றும் பாதுகாப்பை பெறுவதில் சம உரிமை பெற்றுள்ளனர்.

x) **ஆளுமை** : குறைந்த நபர்களைக் கொண்டு அரசினை ஏற்படுத்தி அதிக அளவு ஆட்சியை உயிர்ப்புடனும் நியாயமுடனும் அளித்தல்.

**இடைக்கால நிதியறிக்கை 2019-20ன் புதிய திட்டங்கள்**

1. பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி (PM-KISAN)

   i) **நோக்கம்** :

      a. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உறுதி செய்யப்பட்ட கூடுதல் வருமான உதவி

      b. அறுவடை காலத்திற்கு முன் விவசாயிகளின் அவசரத் தேவைகளுக்கான உதவிகளைச் செய்தல்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

ii) **உதவி** : ஒரு வருடத்திற்கு ரூ.6000 நேரடி மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

iii) **பயனாளர்கள்** : பாதிப்படைந்த நிலத்தை கொண்டிருக்கும் விவசாயக் குடும்பங்கள், 2 ஹெக்டேர் வரை விவசாய நிலம் வைத்திருக்கும் விவசாயிகள்.

iv) **நிதியளிப்பு** : முழுவதும் மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

v) **பட்ஜெட் செலவீடு** :

a. நிதி ஆண்டு 2019-20க்கு வருடாந்திர செலவீனம் ரூபாய் 75,000 கோடி

b. 2018-2019 நிதியாண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கு ரூபாய் 2000 கோடி ஒதுக்கீடு.

vi) **நேரடியாக வங்கிக் கணக்கில் சேர்த்தல்** : மூன்று தவணைகளில் ரூபாய்.2000 விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும்.

2. ராஷ்ட்ரிய காமதேனு ஆயோக்

i) **நோக்கம்** :

a. பசுவகைகளில் நிலையான மரபணு மேம்பாட்டுக்கு அடித்தளமிடுதல்.

b. பசுக்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்.

ii) **செயல்பாடு** : பசுக்களுக்கான திறன் வாய்ந்த சட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களை உருவாக்குதல்.

3. பிரதம மந்திரி ஷ்ரம் - யோகி மான்தன்

i) **நோக்கம்** : அமைப்பு சாரா நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வயதான காலத்தில் உதவும் வகையில் ஓய்வுதியத் திட்டத்தின் மூலம் சமூகப் பாதுகாப்பளித்தல்.

ii) **பயனாளிகள்** : ரூபாய் 15000 வரை வருமானம் பெறும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைவார்கள்.

iii) **அம்சங்கள்** :

a. 60 வயது முதல் உறுதியாக மாதம் ரூபாய் 3000 ஓய்வூதியம் அளிக்கப்படும்.

b. 29 வயதில் இத்திட்டத்தில் சேரும் நபர்கள் மாதத்திற்கு 100 ரூபாய் மட்டும் அவர்களின் 60 வயது வரை செலுத்த வேண்டும்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

c. 18 வயதில் இத்திட்டத்தில் சேரும் நபர்கள் மாதத்திற்கு 55 ரூபாய் மட்டும் அவர்கள் 60 வயதடையும் வரை செலுத்த வேண்டும்.

d. பயனாளர் ஓய்வூதியக் கணக்கில் அத்தொகைக்கு சமமான தொகையை ஒவ்வொரு மாதமும் அரசு செலுத்தும்.

**நிதியளிப்பு** : மத்திய அரசால் ரூபாய் 500 கோடி இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

4. நல்வாழ்வு மேம்பாட்டு வாரியம் :
   a. நோக்கம் :
      i) சீர் மரபினர், நாடோடிகள் மற்றும் பகுதி நேர நாடோடி சமூகத்தினர்களுக்கான நல்வாழ்வு மேம்பாட்டு திட்டங்களை ஊக்குவித்தல்.
      ii) இது சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.
   b. செயல்முறை :
      i) சீர் மரபினர், நாடோடிகள் மற்றும் பகுதி நேர நாடோடிகள் சமூகத்திற்குச் சென்றடைய முடியாத நலத்திட்டங்களை சென்றடையச் செய்வதற்கான உத்திகளைக் கையாள வேண்டும்.
      ii) இன்னும் முறையாக வகைப்படுத்தப்படாத சீர்மரபினர், நாடோடிகள் மற்றும் பகுதி நேர நாடோடிகள் சமூகத்தை அடையாளம் காண நிதி ஆயோக்கின் கீழ் ஒரு குழு அமைக்க வேண்டும்.
   c. அச்சமூகங்களைப் பற்றி
      i) இச்சமூகங்களை எளிதில் இனங்கண்டறிய இயலாத நிலையில் அடிக்கடி அவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளிலிருந்து விடுபடுகின்றனர்.
      ii) வாழ்வாதாரத்திற்காக நாடோடிகள் மற்றும் பகுதி நேர நாடோடிகள் இடத்திற்கு இடம் மாறிக் கொண்டிருக்கிறார்கள்.
      iii) ரங்கே ஆணையம் (Renke Commission) மற்றும் இதேத் ஆணையம் (Idate Commission) இத்தகைய சமூகங்களை அடையாளம் கண்டது.

5. செயற்கை நுண்ணறிவிற்கான தேசியத் திட்டம்
   a. **நோக்கம்** : செயற்கை நுண்ணறிவு மற்றும் அது தொடர்பான தொழில்நுட்பத்தின் பயன்களை மக்களுக்கு வழங்குதல்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

b. சிறப்பு மையங்களுடன் இணைந்து செயற்கை நுண்ணறிவிற்கான தேசிய மையத்தை ஏற்படுத்துதல்.
c. ஒன்பது முன்னிலை தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
d. இத்திட்டத்திற்கு ஆதரவளிக்க தேசிய செயற்கை நுண்ணறிவிற்கான தளத்தினை ஏற்படுத்த வேண்டும்.

6. தொழில்துறை நிறுவனங்களை ஊக்குவித்தல் மற்றும் உள்நாட்டு வணிகத்திற்கான துறை
   a. சில்லறை வணிகம் மற்றம் வணிகர்கள் மற்றும் அவர்களின் கீழ் வேலை செய்யும் பணியாளர்களின் நலத்துறை போன்றவற்றை உள்ளடக்கிய உள்நாட்டு வாணிபத்தை ஊக்குவித்தல். இதற்காக தொழிற்துறைத் கொள்கை மற்றும் உயர்வுக்கான துறையை நியமித்தல்.
   b. எனவே தொழிற்துறைக் கொள்கை மற்றும் உயர்வுக்கான துறையானது தொழிற்துறை உயர்த்தல் மற்றும் உள்நாட்டு வாணிபத் துறை என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
7. மீன்வளத்துறை :
   a. மீன்வளத்துறை என்ற தனித்துறையை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.
   b. நோக்கம் : மீன்வளத்துறையின் வளர்ச்சிக்காக நிலையான மற்றும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

   **மற்ற பயன்கள்**

   a. கிசான் கடன் அட்டை மூலமாக கால்நடை வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்புக்கு கடன் பெற்ற விவசாயிகளுக்கு 2% மானியம் வழங்கப்படும்.
   b. குறித்த நேரத்தில் கடனை திரும்பச் செலுத்தியவர்களுக்கு கூடுதலாக வட்டியில் 3% மானியம் வழங்கப்படும்.
   c. பேரிடர் காலங்களில் கடனின் மொத்த கால அளவையும் மாற்றியமைக்கும் பொழுது 2% வட்டிக் தொகையை மானியமாக அரசு செலுத்தும்.
8. முத்திரை வரியில் சீர்திருத்தங்கள் :
   a. இவ்வமைப்பை நெறிமுறைப்படுத்த திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.
   b. பங்கு வர்த்தகத்தின் மூலம் ஒரு பரிவர்த்தனை தொடர்பான ஆவணத்திற்கு முத்திரை வரி விதிக்கப்பட்டு ஒரு இடத்தில் திரட்டப்படுகிறது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

c. மாநிலத்தில் உள்ள மக்கள் செலுத்திய முத்திரை வரியின் அடிப்படையில் இவ்வரிப் பணமானது மாநில அரசுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

9. சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை வலிமைப்படுத்துதல்

a. ஜி.எஸ்.டியில் பதிவு செய்த சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களுக்கு அதிகரிக்கப்பட்ட கடன் ரூபாய் 1 கோடிக்கு 2% வட்டித் தொகை மானியம் வழங்கப்படும்.

b. அரசாங்க நிறுவனங்களில் 25 விழுக்காட்டில் 3 விழுக்காடானது பெண்களால் நிர்வகிக்கப்படும் சிறு மற்றும் குறு தொழிற்நிறுவனங்களாக இருத்தல் வேண்டும்.

**முக்கிய பட்ஜெட் ஒதுக்கீடுகள்**

a. முதன் முறையாக ரூபாய் 3,00,000 கோடி இராணுவத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

b. 2018-19 பட்ஜெட்டை ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் வடகிழக்கு மாநிலங்களுக்காக 21% ஒதுக்கிடப்பட்டுள்ளது.

c. 2018-19 பட்ஜெட்டை ஒப்பிடுகையில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கான ஒதுக்கீடு முறையே 35.6% மற்றும் 28% ஆகும்.

d. 2018-19 பட்ஜெட்டை ஒப்பிடுகையில் மத்திய அரசின் உதவி பெறும் திட்டங்களுக்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது.

e. ரயில்வேயிற்கான மூலதன ஆதரவு ரூபாய் 64,587 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஏற்கனவே இருக்கும் திட்டங்களை மேம்படுத்துதல்**

a. ராஷ்டிரிய கோகுல் திட்டம் : நடப்பு ஆண்டுக்காக ரூபாய் 750 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

b. மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் : ரூபாய் 60,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

c. பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனாவிற்காக 2019-20 ஆண்டுக்கு ரூபாய் 19,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

d. ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 2018-2019 வருடத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபாய் 23557 கோடி ரூபாயானது மேலும் அதிகரிக்கப்பட்டு 27584 கோடியாக 2019-20ஆம் வருடத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

e. தேசிய கல்வித் திட்டம் : 20% ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டு 2019-20ஆம் ஆண்டுக்கு ரூபாய் 38,512 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**நிதித் திட்டம்**

1. நேரடி வரி : 2019-20ஆம் ஆண்டின் இறுதியில் நேரடி வரி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.6 சதவீதமாக இருக்குமென எதிர் பார்க்கப்படுகிறது.
   a. வருமான வரி : ஏற்கனவே இருந்த வருமான வரி வீதமே தொடரவுள்ளது. ரூபாய் 5 இலட்சம் வரை வருமானம் பெறுவர்களுக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது.
   b. பயனாளர்கள் : நடுத்தர வர்க்க மற்றும் சிறுதொகையை வரியாக செலுத்துபவர்கள், சிறு தொழில்கள், சிறு வணிகர்கள், மாத ஊதியம் பெறுபவர்கள், ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் மூத்த குடிமக்கள்.
   c. சாதனைகள் : 2013-14ஆம் ஆண்டு ரூபாய் 6.38 இலட்சம் கோடியாக பெறப்பட்ட வரித்தொகையானது இவ்வருடம் 12 இலட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. 80% வளர்ச்சி பெற்றுள்ளது.
2. நிதிப்பற்றாக்குறை :
   a. 2019-20ஆம் ஆண்டிற்கான நிதிப்பற்றாக்குறை 3.4 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
   b. ஏழு வருடங்களுக்கு முன்பு 6%ஆக இருந்த நிதிப்பற்றாக்குறை 2018-19 ஆம் நிதியாண்டில் 3.4% சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
   c. நிதிப்பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மை சட்டத்தின் பரிந்துரை
      i) இந்திய அரசின் கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கிடையே உள்ள விகிதம் 2024-25 ஆம் ஆண்டில் 40% ஆக இருக்க வேண்டும்.
      ii) 2020-21ஆம் வருடம் நிதிப்பற்றாக்குறை ஒருங்கிணைப்புடன் சேர்த்து கடன் ஒருங்கிணைப்புத் திட்டத்திலும் கவனம் செலுத்துகிறது.
   d. மற்ற முக்கிய உண்மைகள் மற்றும் பகுப்பாய்வுகள்
      i) பேரியல் பொருளாதார கட்டமைப்பு அறிக்கை
      ii) 2018-19 ஆண்டின் வருவாய் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.2% ஆக இருந்தது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

iii) 2018-19 முதல் அரையாண்டில் நடப்பு கணக்குப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.7% விரிவுபடுத்தப்பட்டது.

e. நடுத்தர கால நிதிக் கொள்கை மற்றும் நிதிக் கொள்கை மூலோபாய அறிக்கை
   i) 2019-20 ஆண்டில் நிதிப்பற்றாக்குறையை FRMB சட்டப்பாதையில் கொண்டு செல்வதில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது.
   ii) செலவுத் திறனை மேம்படுத்துதல்
   iii) வரி வசூலை மேம்படுத்துதல்

f. 2018-19 நிதியாண்டை ஒப்பிடுகையில் நேரடி வரியானது 13.5% இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

g. 2018-19 நிதியாண்டை ஒப்பிடுகையில் நேரடி வரியானது 15% அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

h. மறைமுக வரியானது 2018-19-ம் ஆண்டை ஒப்பிடுகையில் 11.8% அதிகரிக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஜிஎஸ்டி வரிவிதிப்பின் மூலம் 2019-20-ம் ஆண்டு வசூல் செய்யப்படுவதை அடிப்படையாகக் கொண்டே இது கணக்கிடப்பட்டுள்ளது.

i. இந்த செலவு உயர்வுக்குக் காரணம்
   i) குறைந்த பணவீக்கம்
   ii) விவசாயத்துறைக்கு அதிக ஆதரவு அளித்தல்
   iii) வட்டிப்பணம் அதிகரித்ததால்
   iv) உள்நாட்டு பாதுகாப்பிற்காக செலவிடல்

j. அரசுப் பங்குகளை விற்றதன் மூலம் 2019-20 ஆண்டில் கடன் அல்லாத மூலதன வருவாய் அதிகரித்தது.

k. 2018-2019ஐ ஒப்பிடுகையில் மொத்த நிகர கடன் 11%மாக அதிகரித்துள்ளது.

l. கடந்த 5 வருடங்களில் சராசரி பணவீக்கமானது 4.6% சதவீதமாகக் குறைந்துள்ளது. 2018 டிசம்பர் மாதம் 2.19% சதவீதம் மட்டுமே குறைந்தது.

அரசுப் பங்குகளை விற்றதன் மூலம், நிர்ணயிக்கப்பட்ட 80,000 கோடி ரூபாய் இலக்கை அடையமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 2019-20 ஆண்டுக்கான இலக்காக 90,000 கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

3. **தமிழ்நாடு வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில் கொள்கை 2019 பற்றி கட்டுரை வரைக.**

தமிழ்நாடு - இந்தியப் பொருளாதாரத்தின் பெரும் சக்தி

முகவுரை :

a. அதிகரித்து வரும் பொருளாதார செலவீனங்கள் மற்றும் வர்த்தக ரீதியிலான வான்வெளி சந்தை வாய்ப்புகள் போன்றவற்றால் இந்தியா வேகமாக வளர்ந்து வரும் பாதுகாப்பு மற்றும் வான்வெளி சந்தையாக உருவெடுத்துள்ளது.

b. வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழிற்சாலைகள் என்பவை வர்த்தக மற்றும் இராணுவ வானூர்திகள், ஏவுகணைகள் விண்வெளி ஆராய்ச்சி அமைப்புகள், விண் ஓடங்கள் ஆகியவற்றை வடிவமைத்தல், சோதனை செய்தல், மேம்படுத்துதல், தயாரித்தல் மற்றும் பராமரித்தல் என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

**கொள்கையின் குறிக்கோள்கள் :**

a. சிவில் மற்றும் பாதுகாப்புத் துறைகளுக்கு தேவையான வானூர்திகளை வடிவமைத்தல், தயாரித்தல் ஆகியவற்றிற்கு ஏதுவான சூழலை உருவாக்குதல்.

b. வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறையில் அடுத்த 5 ஆண்டுகளில் 5 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவிலான முதலீட்டையும் அடுத்த 10 ஆண்டுகளில் 10 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவிலான முதலீட்டையும் ஈர்த்தல்.

c. 10 ஆண்டுகளில் ஒரு லட்சம் பேருக்கு நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருதல்.

d. தானியங்கி உற்பத்தித் துறையில் தமிழ்நாட்டுக்கு இருக்கும் திறமைகளை வான் மற்றும் பாதுகாப்புத் துறையில் முழுமையாகப் பயன்படுத்துதல்.

e. உயர்தர உற்பத்திப் பொருட்களை உருவாக்குவதற்கான நிபுணத்துவ மையங்கள், திறன் மேம்பாட்டு நிறுவனங்கள், ஆராய்ச்சி வடிவமைப்பு மையங்கள் போன்றவற்றை உருவாக்குதல்.

f. இந்தியாவின் பெரு நிறுவனங்கள், சர்வதேச OEM-கள், முதல் தர வழங்கு நிறுவனங்கள் ஆகியவற்றை ஈர்ப்பதற்கான நிர்வாக உதவிகளை வழங்குதல்.

**வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்துறைகளை கட்டமைப்பதற்கான சூழலை உருவாக்குதல்**

**தொழில் துறை கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்**

a. குழும மேம்பாட்டு அணுகுமுறையை (Cluster development Approach) கடைபிடித்து அதன் மூலம் தேவையான கட்டமைப்பை அரசானது உருவாக்க வேண்டும்.
b. TIDCO/SIPCOT மூலம் அரசானது வான்வெளி மற்றும் பாதுகாப்பு பூங்காக்களை உருவாக்க வேண்டும்.
c. சென்னை, கோயம்புத்தூர், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் திருச்சி போன்ற முக்கிய நகரங்களில் அரசானது வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழிற்சாலை குழுமங்களை உருவாக்குதல்.
d. வான்வெளி மற்றும் பாதுகாப்பு பூங்காக்களை ஊக்கப்படுத்துவதற்காக சிறப்பான ஊக்கத்தொகை மற்றும் உதவிகளை அரசு வழங்க வேண்டும்
e. வான்வெளி பாதுகாப்பு பூங்காக்களுக்கு செல்லத் தேவையான சாலை, இரயில் மற்றும் வான்வழிப் போக்குவரத்தை மேம்படுத்துதல்.

**திறமையான மனித வளத்தினை உருவாக்குதல்**

a. பல்வகைத் திறமைகள் கொண்ட மனித வளமே வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்துறையில் மிக முக்கிய தேவையாகும்.
b. மாநிலத்தில் உள்ள பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரிகள், வானூர்தி பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள திறமையான மாணவர்களுக்கு வாய்ப்பளித்தல் மற்றும் மாநிலத்துக்கு தேவையான திறன் மேம்பாட்டை வளர்த்தெடுத்தல்.

**புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு :**

a. நிலையான வான்வெளி & பாதுகாப்பு துறையின் வளர்ச்சிக்கு வலிமையான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு தளம், நெருக்கமான கல்வி-தொழில்துறை கூட்டிணைவு ஆகியவற்றை உருவாக்குதல்.
b. கல்வி நிறுவனங்களிலும் ஆராய்ச்சி & மேம்பாட்டு ஆய்வகங்களிலும் புதுமையான தொழில்நுட்பங்களையும் சிந்தனைகளையும் உருவாக்குதல்.
c. வான்வெளி மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி அமைப்புகளை அமைப்பதனை மாநிலங்கள் ஊக்குவித்தல்
d. சில குறிப்பிடத் தகுந்த ஆராய்ச்சி முன்னெடுப்புகளை மேற்கொள்ள அரசானது புதிய ஆராய்ச்சிக் கூடங்களை கல்வி நிறுவனங்களில் அமைக்க வேண்டும்.
e. தேசிய மற்றும் உலக அளவில் உள்ள சிறப்பு வாய்ந்த நிறுவனங்களுடன் ஆராய்ச்சி & மேம்பாட்டு ஒருங்கிணைப்புக்கு அரசானது உதவ வேண்டும்.

**பாதுகாப்பு தொழிற்சாலை வழித்தடங்களின் வளர்ச்சி**

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

a. மத்திய பட்ஜெட் 2018-2019ல் பாதுகாப்புத் தளவாடங்கள் உற்பத்தி வழித்தடமானது தமிழ்நாட்டில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
b. தமிழ்நாட்டில் பாதுகாப்பு தொடர்பான பொதுத்துறை நிறுவனங்களுக்கு சேவையளிப்பதற்கான உற்பத்தி அலகுகள் சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.
c. அதிகமான முதலீடுகளை ஈர்க்கவும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி வழித்தடத்தினை அமைப்பதற்கான உதவிகளை பாதுகாப்பு அமைச்சகத்துக்கு தமிழக அரசானது வழங்கும்.

**வான்வெளி மற்றும் பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி துறைக்கான ஊக்கத் தொகை மற்றும் சலுகைகள்** :

வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறைகளுக்கு பின்வரும் சலுகைகள் மற்றும் ஊக்கத்தொகைகள் கிடைக்கின்றன.

a. Anchor Unit Subsidy
b. திறன் மேம்பாட்டுக்கான மானியம்
c. சான்றிழ் வழங்குவதற்கான மானியம்
d. நிலம் ஒதுக்குவதற்கான மானியம்
e. உற்பத்தி அலகுகளுக்கான முதலீட்டு மானியம்
f. வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழிற்சாலை பூங்காக்களின் மேம்பாட்டுக்கான முதலீட்டு மானியம்
g. வானூர்தி பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்பு வசதிகள்
h. மின்சார வரி விலக்கு
i. முத்திரை வரி வலுகை
j. சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான கட்டமைப்பு மானியம்
k. பல்வேறு மானியங்களின் தொகுப்பு
l. தொழிலாளர் துறையில் புதிய முன்னெடுப்புகள்
m. ஊக்கத் தொகைகளை நடைமுறைப்படுத்தல்
n. ஒற்றைச் சாளர அனுமதி வழங்கல் முறை

## 4. தமிழ்நாடு சூரிய மின் எரிசக்தி கொள்கை - 2019.

**அறிமுகம்** :

a. காலநிலை மாற்றத்திற்கான பன்னாட்டு குழு (IPCC) ஒரு சிறப்பு ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது. வளிமண்டலத்தின் வெப்பநிலையானது, தொழில்மயமாதலுக்கு முன் இருந்ததை விட

1.5°C உயர்வடையும்போது ஏற்படும் விளைவுகள் இந்த அறிக்கையில் கணக்கிடப்பட்டுள்ளன.

b. 1°C உலக வெப்பநிலை உயர்வால் மோசமான வானிலை, கடல் மட்ட உயர்வு மற்றும் ஆர்க்டிக் பனிப்பாறைகள் உருகுதல் போன்ற நிகழ்வுகளை ஏற்கனவே நாம் கண்டு வருகிறோம் என்ற முக்கிய செய்தியை இவ்வாய்வறிக்கை வெளிப்படுத்துகிறது.

c. பாரிஸ் ஒப்பந்த வாக்குறுதியை நிறைவேற்றும் பட்சத்தில் உலக வெப்பநிலை உயர்வு 1.5°C கடந்துவிடும் என இந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**முகப்புரை** :

a. அரசமைப்பு சட்டத்தின் வழிகாட்டு விதிமுறையின் சரத்து 48.A-வின் மீது தமிழ்நாடு மாறாத உறுதிப்பாட்டைக் கொண்டுள்ளது.
   - சரத்து 48.A – சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் மற்றும் மேம்படுத்தவும் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

b. தமிழ்நாடு சூரியமின் எரிசக்தி கொள்கை 2012, தமிழ்நாடு அரசின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது. மேலும் இதுவே நாட்டில் வெளியிடப்பட்ட முதலாவது சூரியமின் எரிசக்தி கொள்கையாகும்.

**தமிழ்நாட்டின் சூரிய எரிசக்தி தொலைநோக்குப்பார்வை** :

a. சூரிய எரிசக்தியானது தமிழ்நாட்டின் எதிர்காலத்தில் நீடித்த ஆற்றலில் முக்கிய பங்கு வகிக்கும்.

b. சூரிய எரிசக்தி திட்டங்கள் தமிழ்நாட்டின் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கும்.

c. சூரிய எரிசக்தி தமிழ்நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் கிடைக்கும் வகையில் அணுகக்கூடியதாகவும், குறைவான விலையிலும் இருக்கும்.

d. சூரிய ஆற்றல் கொண்ட மின்சாரம் தயாரிக்கப்படும்போது மாநிலத்தின் எரிசக்தி துறையில் கார்பன் வாயு வெளியேற்றம், தண்ணீர் பயன்பாடு ஆகியவை குறையும்.

e. 2023 ஆம் ஆண்டிற்குள் வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் காலநிலை மாற்றத்தில் தமிழ்நாடு உலக நாடுகளின் தலைவராக விளங்கும்.

**சூரிய மின் எரிசக்தி கொள்கையின் குறிக்கோள்கள்** :

a. தெளிவான மற்றும் வெளிப்படையான ஆளுகை கொள்கை

b. சூரிய எரிசக்தி தொலைநோக்குப் பார்வையை கொள்கையளவில் நடைமுறைப்படுத்த தேவையான சூழலை உருவாக்குதல்.

c. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ள இலக்குகளை அடையவும் (அ) விஞ்சவும் தேவையான வழிமுறைகளை பயன்படுத்துதல்.

d. விதிமுறைகளுக்கு உட்பட்டு பொது மின்சார அமைப்புக்களை அணுகுவதற்கு வழிவகை செய்வது மற்றும் அதன் மூலம் மின்சார கிரிடுடன் இணைக்கப்பட்ட சூரிய எரிசக்தி மின் பகிர்மான அமைப்புகளை உருவாக்குதல்.

e. மின் நுகர்வோர்களை சூரியமின் எரிசக்தி கட்டமைப்புக்களை அமைக்க ஊக்குவித்தல்.

f. தொழில்நுட்ப உதவி, நிதி உதவி மற்றும் திட்டங்களுக்கு அனுமதி பெறுவது ஆகியவற்றிற்கு அரசின் பல்வேறு துறைகளுக்கிடையே ஒத்துழைப்பை அதிகரித்து “ஒற்றைச் சாளர அமைப்பை” ஏற்படுத்துதல்.

g. சூரிய மின்னாற்றல் திட்டங்கள், அதனோடு தொடர்புடைய சாதனங்கள் உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டில் தனியார், பொதுத்துறை நிறுவனங்கள், கூட்டு நிறுவனங்கள் ஆகியவற்றை ஊக்குவித்தல்.

h. சூரிய எரிசக்தி துறையில் “தொழில் துவங்க சாதகமான” சூழலை உருவாக்குதல்.

i. சூரிய எரிசக்தி துறையில் முதலீட்டுக்கு சாதகமான சூழலை உருவாக்குதல். தனி நபர்கள், நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், நுகர்வோர்களை உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோராக மாறும் வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்.

j. அனைத்து பங்குதாரர்களுக்கும் வெற்றியைக் கொடுக்கும் சூழலை உருவாக்குதல்.

k. மத்திய அரசின் தேசிய புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் கொள்கையின் நோக்கங்களை அடைய தேவையான திட்டங்களை உருவாக்குதல்.

**சூரிய மின் எரிசக்தி இலக்குகள் :**

a. 2023 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் 9000MW அளவிற்கு சூரிய மின்னாற்றல் உற்பத்தி கட்டமைப்புக்களை உருவாக்குதல். இவற்றில் 40% நுகர்வோர்களே உற்பத்திச் செய்தல்.

b. இக்கொள்கையின் கீழ் அடுத்தடுத்த ஆண்டுகளின் இலக்குகள் தமிழ்நாடு அரசு அவ்வப்போது வெளியிடும்.

**சூரியமின் சக்தி நடைமுறைப்படுத்துதல் மாதிரிகள் :**

சூரிய ஆற்றல் அமைப்புகள் பின்வரும் மாதிரிகளில் நடைமுறைப்படுத்தப்படலாம்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**முன்னுரிமை** :

சூரிய சக்தி அமைப்பை வாங்குபவர், விநியோகிப்பவர்கள் மூலதன செலவை ஏற்றுக்கொண்டு அதற்கான உரிமையை பெற்றுக்கொள்வார்.

**ஒத்திசைக்கப்பட்ட உரிமை** :

சூரிய சக்தி அமைப்புக்களை விநியோகிப்பாளர்கள் அமைப்பார்கள் மற்றும் அவற்றை பராமரிப்பார்கள். இவ்வமைப்பை செயல்திறன் அடிப்படையில் குத்தகைக்கு எடுப்பார்கள். அதன்பின் உரிமையானது விநியோகிப்பாளர்களிடமிருந்து நுகர்வோர்க்கு இருவரின் ஒப்புதல் பெற்ற தேதியில் மாற்றப்படுகிறது.

**சூரிய சக்தி திட்டங்கள்** :

a. சட்டங்கள் மூலம் உருவாக்குதல் மற்றும் (ECBC) ஆற்றல் பாதுகாப்பு குறியீடுகளை உருவாக்குதல் மூலம் இணங்குதல்.
b. அரசாங்கமானது மின்ஆற்றலில் இயங்கும் வாகனங்கள் மற்றும் சூரிய ஆற்றலில் இயங்கும் சார்ஜிங் வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.
c. தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டத்திற்கு கீழுள்ள அனைத்து பொது கட்டிடங்களும் சூரிய ஆற்றல் முறைகளான ஒளிமின்னழுத்த முறை மற்றும் வெப்ப முறைகளில் நிறுவ ஊக்குவிக்கப்படுகின்றன.
d. பெருநிறுவனங்கள், நகராட்சிகள் மற்றும் உள்ளூர் நகர்ப்புற அமைப்புகள் ஆகியவற்றில் சூரிய ஒளி மின்னழுத்த ஆற்றலை அடிப்படையாக் கொண்ட தெரு விளக்குகள் மற்றும் நீர் வழங்கல்களுக்கு ஊக்குவிக்க வேண்டும்.
e. சூரிய வெப்ப ஆற்றல்கள் குடியிருப்புகளிலும், நிறுவனங்கள் மற்றும் வணிகப் பகுதிகளிலும் பயன்படுத்த ஊக்குவிக்கப்பட வேண்டும்.
f. தொழில்துறை பயன்பாட்டிற்கான சூரிய வெப்ப பயன்பாடுகள் மற்றும் செறிவூட்டப்பட்ட சூரிய சக்தியும் ஊக்குவிக்கப்படுகின்றன.

**ஊக்கத்தொகை**

a. இந்தக் கொள்கையின் மூலம் சூரிய ஒளி ஆற்றலுக்கு மின்சார வரியிலிருந்து இரண்டு ஆண்டுகள் வரி விலக்கு அளிக்கப்படுகிறது.
b. விவசாயத்தில் சூரிய ஒளி ஆற்றல் உற்பத்திக்காக உகந்த ஊக்கத் தொகை திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. இவை விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல், கட்ட இணைப்பு நிலை (Grid connecting) மற்றும் ஆற்றல் ஆகியனவாகும்.

**வெளியேற்றம்** ;

a. நுகர்வோருக்கு சூரிய ஒளி மின்னழுத்த அமைப்புகள் சேவை இணைப்பு புள்ளி 100%-ஐ விட அதிகமாக இருக்காது.
b. விநியோகத்தில் அதிகபட்ச ஒட்டுமொத்த சூரிய பி.வி. திறன் மின்மாற்றி நிலையானது மாற்றியமைக்கப்பட்டு TNERC-ஆல் தீர்மானிக்கப்படுகிறது.

**விழிப்புணர்வு உருவாக்கம் கல்வி மற்றும் திறன் மேம்பாடு** :

a. அனைத்து பொது மற்றும் தனியார் பள்ளிகள் ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய பாடத்திட்டத்தை கொண்டுவர வேண்டும்.
b. TEDA மற்றும் பிற நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் ஆற்றல் பாதுகாப்பு பயிற்சி திட்டங்கள் மற்றும் ஆண்டு சூரிய ஆற்றல் திட்டங்களில் மாநில அரசுத் துறைகள் மற்றும் மாநில பொதுத் துறைகள் பங்கேற்க ஊக்குவிக்கப்படுகின்றன.
c. அனைத்து உயர் கல்வி நிறுவனங்களிலும் காலநிலை மாற்றத்தினைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, புதுப்பிக்கத்தக்க ஆற்றலே தடுப்பு உக்தி என்னும் விழிப்புணர்வை கொண்டு வர வேண்டும்.
d. தமிழ்நாடு அரசானது சூரிய ஒளி ஆற்றல் ஆராய்ச்சிக்கு உதவுகிறது. TEDA மற்ற அரசுத் துறைகளுடன் இணைந்து சூரிய ஆற்றல் ஆராய்ச்சி நிதியத்தை உருவாக்குகிறது.
e. தமிழ்நாடு மற்ற பல்துறை நிறுவனங்களுடன் இணைந்து அதன் சூரிய ஒளி ஆற்றல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு உதவுகிறது.

**மாநில முகமைகளின் பங்கு** :

a. இந்த சூரிய ஆற்றல் கொள்கைகளைத் தொடங்குவதில் ஊடகங்கள் விளம்பர பலகைகள், வலைத் தளங்கள் மற்றும் பலவற்றினை பயன்படுத்தி TEDA செயல்படுகிறது.
b. TEDA விரிவான தகவல் மற்றும் வழிப்புணர்வை ஏற்படுத்தி மாநிலத்தில் சூரிய சக்தியை ஊக்குவிப்பதற்கான முயற்சியை ஏற்படுத்துகிறது.
c. TEDA/TANGEDCO ஆகியவை சூரிய ஆற்றலில் சிறந்து விளங்கும் தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் சேர்ந்து ஆராய்ச்சி மேம்பாடுகளில் சிறந்து விளங்க உதவுகின்றன.
d. TANGEDCO சூரியசக்தி திட்டங்களை மேம்படுத்த பல்வேறு முறைகளான பொதுமுறை, தனியார்-பொது-தனியார் கூட்டாண்மை மற்றும் கட்டுமானத்தற்கு பின்பு சொந்தமாக்கி பரிமாற்றம் செய்யப்படும் முறைகள் (BOOT) Modes.
e. TEDA இத்திட்டங்களில் TANGEDCO-க்கு ஆலோசனை வழங்கும்.

f. TANGEDCO ஆனது சூரிய சக்தி திட்டங்களான ஆற்றல் சேமிப்பு திட்டங்கள்/சூரியப் பூங்காக்கள்/மிதக்கும் சூரியப் பூங்காக்கள் ஆகியவை சுயமாகவோ (அ) இந்திய சூரிய ஆற்றல் கழகத்துடன் சேர்ந்தோ இம்முயற்சியை எடுக்கிறது.

**செயல்படும் காலம் :**

a. இந்த கொள்கையானது 04.02.2019 அன்று நடைமுறைக்கு வந்தபின் மற்றொரு கொள்கையினால் மாற்றப்படும் வரை நடைமுறையில் இருக்கும்.

b. இத்திட்டத்தின் கொள்கையை அமல்படுத்த அரசானது ஆண்டுக்கொரு முறை மதிப்பீடு செய்கிறது. கொள்கை நோக்கங்களுக்கு எதிராக உண்மையான முடிவுகளை மதிப்பீடு செய்கிறது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS